[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2020 செப்டம்பர் 15*

இத்திட்டம் முதற்கட்டமாக தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் 12.78 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும். முதற்கட்டமாக 100 இருக்கைகள் கொண்ட உதவி மையமாக செயல்பட இருக்கும் இம்மையம், தேவைக்கேற்ப விரிவாக்கம் செய்யப்படும். குறைதீர்க்கும் முகாம்களிலோ, இணையதளத்திலோ அல்லது அரசு அலுவலர்களோ குறைதீர்க்கும் மனுக்களைப் பெறும்போது வேலைவாய்ப்பு கோரி பெறப்படும் மனுக்களே அதிகமாக உள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு, இந்த மையங்களில் பெறப்படும் அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு, தேவைப்படின் மனுதாரர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, உரிய வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின்மூலம் பல்வேறு அரசுத் துறைகள் தொடர்பான தனது குறைகளை, மனுதாரர் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்யலாம். இந்த மனுக்கள் "முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்"மூலம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

3. தகவல் கோரல்

(அ) நீட் தேர்வை இரத்து செய்யாத மத்திய அரசை எதிர்த்தும், நீட் தேர்வை இரத்து செய்ய மாநில அரசு கேட்கவில்லையென்று கூறிய மத்திய அமைச்சரைக் கண்டித்தும் கண்டனத் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் அனிதா முதல் இன்று திருச்செங்கோடு மோதிலால் வரை பல மாணவ, மாணவிகள் நீட் தேர்விற்குப் பயந்து தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கிறார்கள். நீட் தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட நாம் அனைவருமே தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். இதே பேரவையில் நீட் தேர்விற்கு எதிராக மாணவச்

2020 செப்டம்பர் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

செல்வங்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே ஏகமனதாக தீர்மானத்தையும் நாம் நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பி வைத்திருக்கிறோம். தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விதிவிலக்கு அளிக்கக் கோரி, இந்த அவையிலே 2 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு, அவற்றை மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கும் அனுப்பி வைத்தோம். ஆனால், இந்த அவையினுடைய உணர்வுகளை மத்திய அரசு கிஞ்சிற்றும் மதிக்கவில்லை. அனுப்பிய மசோதாவிற்கு இதுவரை ஒப்புதலும் நாம் வாங்கிடவில்லை. செப்டம்பர் 12 ஆம் தேதி அதாவது நீட் தேர்விற்கு முதல் நாள், அந்த ஒரே நாளில் 3 மாணவ, மாணவிகள், மதுரை ஜோதிஸ்ரீதுர்கா, தருமபுரி ஆதித்யா, திருச்செங்கோடு மோதிலால் என 3 மாணவ, மாணவிகள் தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோயிருக்கிறார்கள். "I am sorry. I am tired" என்று மதுரையிலே தற்கொலை செய்துகொண்ட மாணவி ஜோதி ஸ்ரீதுர்காவினுடைய audio voice ஒட்டுமொத்த தமிழக மாணவர்களுடைய voice என்பதை மத்திய அரசு ஏற்க மறுக்கிறது. இதற்கிடையில் செப்டம்பர் 13 ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்விலே எண்ணிப்பார்க்க முடியாத அடக்குமுறைகள் நடந்திருக்கின்றன. கெடுபிடிகள்; புதுமணத் தம்பதிகளை 'தாலியைக் கழற்றி வைத்துவிட்டு தேர்வு எழுதுங்கள்' என்று நெல்லையில் அந்தக் கொடுமை நடந்திருக்கிறது. பல இடங்களில் பசிக் கொடுமையால் மாணவிகள் மயங்கி விழுந்திருக்கிறார்கள். அடிப்படை வசதியில்லாத காரணத்தினாலே பல இடங்களிலே பெற்றோர்களும், தேர்வு எழுதப் போன மாணவர்களும் தவித்துப்போய் இருக்கிறார்கள். மதுரை தேர்வு மையங்களில் ஹிந்தி வழிகாட்டுதல்கள் தலைதூக்கி, தமிழ் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மையங்களில் ஆங்கிலக் கேள்வித்தாள்களைக் கொடுத்து, சில மையங்களில் குழப்பமும் ஏற்பட்டுப்போயிருக்கிறது. ஏற்கெனவே இது ஒரு கொடுமை. அதுவும் இந்த கொரோனா காலத்தில் இந்த நீட் தேர்வின் மூலமாக இப்படி ஒரு கொடுமையை நாம் சந்திப்பதா என்ற ஒரு வேதனையும் நமக்கு வந்திருக்கிறது. ஆக, தமிழக சட்டமன்றத்தையும், தமிழர்களினுடைய உணர்வுகளையும் மதிக்காத, நீட் தேர்வை இதுவரை இரத்து செய்யாத மத்திய அரசை எதிர்த்தும், நீட் தேர்வை இரத்து செய்ய அ.தி.மு.க. அரசு கேட்கவில்லையென்று கூறியுள்ள மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. பியூஷ் கோயல் அவர்களைக் கண்டித்தும், ஒரு கண்டனத் தீர்மானத்தை இந்த அவையிலே நாம் கொண்டுவர வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) +2 மதிப்பெண்கள் அடிப்படையில்தான் மருத்துவக் கல்விச் சேர்க்கை நடைபெறுகிறது என்பதை அரசு

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2020 செப்டம்பர் 15*

உறுதி செய்ய வேண்டும், அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி முன்வருகிறபோது திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. ஐ.எஸ். இன்பதுரை, திரு. எம். தமிமுன் அன்சாரி, திரு. உ. தனியரசு ஆகியோரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக–எதிர்க்கட்சித் தலைவர் பேசிவிட்டார்–மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, முனைவர் கோவி. செழியன் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. கரி. இராமசாமி, திருமதி எஸ். விஜயதரணி ஆகியோரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களும் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். தகவல் கோரல் என்ற முறையிலே இந்த அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

முற்பகல் 11–45

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள். அவரை நினைத்து வணங்குகிறேன். அவருடைய புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். வாரிசு அரசியல் என்பது 'காட்டு ராஜாங்கம்' என்று வர்ணித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையிலே நீட் தேர்வு அவசியமில்லை, அதற்காக ஓர் அவசர தீர்மானத்தை இயற்ற வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து நான் விரிவாகப் பேச வேண்டியிருக்கிறது. இந்த நீட் தேர்வு எவ்வாறு வந்தது? எப்படி வந்தது? எப்போது வந்தது? 27–12–2010–ல் மத்திய அரசிலே திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்தபோது, காங்கிரஸ் அரசால் கொண்டு வரப்பட்டதுதான் இந்த நீட் தேர்வு. இதனை மறுப்பீர்களா? ஆனால், இந்த அவசரச் சட்டத்தை 2010–ல் காங்கிரஸ் அரசு மத்தியில் ஆளும்போது. . .

2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் controversy இல்லாமல் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்னவென்று சொல்லுங்கள்?

திரு. மு.க. ஸ்டாலின்: திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த வரையில் நீட் தேர்வு வரவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தவறான தகவலைப் பதிய வைக்க வேண்டாம் என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டில்தான் இதைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்தது யார், காங்கிரஸ் ஆட்சி மத்தியில் இருந்தபோது; மத்திய அரசில் கூட்டணியில் யார் இடம் பெற்றிருந்தார்கள்? திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்றிருந்தது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றைத் திரிக்க முடியாது. 2010 ஆம் ஆண்டிலே, காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இதற்கான ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. (குறுக்கீடு) அந்தச் சட்டத்தை, அப்போது அந்தக் கூட்டணியில் அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழகம் முட்டு கொடுத்ததா, இல்லையா? இதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு) தமிழக மக்களுக்கு ஓர் உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்த காங்கிரஸ் ஆட்சியிலே கொண்டு வந்தார்கள். உடனடியாக, இது தொடர்பாக அதிகமான வழக்குகள் உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் தொடரப்பட்டன. தமிழம் அரசாலும் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கில், நமக்குச் சாதகமான ஒரு தீர்ப்பைப் பெறுகின்றபோது, மறு ஆய்வு மனுவை மத்திய அரசு தாக்கல் செய்கிறது. இந்த மறு ஆய்வு மனுவை யார் தாக்கல் செய்தார்கள் என்றால், திராவிட முன்னேற்றக்

[திரு. ஐ.எஸ். இன்பதுரை] [*2020 செப்டம்பர் 15*

கழகம் அங்கம் வகித்த காங்கிரஸ் அரசு மறு ஆய்வு மனுவைத் தாக்கல் செய்தது. இந்த மறு ஆய்வு மனுவைத் தாக்கல் செய்ததன் விளைவாக, நிலைமை மோசமடைந்தது. அதுமட்டுமல்லாமல், 'வசம்பை வைத்து தேய்த்தாலும் வாயே பேசமாட்டேன்' என்று நினைக்கிற அளவிற்கு அமைதியாக இருந்து விட்டு. . . (குறுக்கீடு) பாராளுமன்றத்தில் அமைதியாக இருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் வருகின்றபோது அமைதியாக இருந்தீர்கள். இன்னும் சொல்கிறேன். நான் சத்தியத்திற்கு சாட்சியம் சொல்ல வேண்டும். சற்று அமைதியாக இருந்து கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இது வரலாறு. வரலாற்றைத் திரிக்காதீர்கள். மாணவர்களின் வாழ்க்கையோடு விளையாடாதீர்கள் என்று கேட்கிறேன். Review petition போட்டீர்கள். நமக்கு எதிராகத் தீர்ப்பு வந்தது. 19–7–2016 அன்று பாராளுமன்றத்திலே இதுகுறித்து விவாதம் வந்தபோது, உங்களுக்கு அங்கு உறுப்பினர் இல்லை. உங்களை விட்டுவிடுவோம். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்தார்கள் என்பது வரலாறு. அதற்குப் பின்பாக, 1–8–2016 அன்று மாநிலங்களவையில் இந்தச் சட்டம் குறித்து விவாதம் வருகிறபோது, உங்களுக்கு மூன்று உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்த அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக் கூடாது என்ற விதி இருக்கிறது. எனவே, பெயரைக் குறிப்பிட்டுப் பேச விரும்பவில்லை. யாரும் எதிர்க்கவில்லை, வெளிநடப்புச் செய்யவில்லை, Point of Order கேட்கவில்லை. குரல் வாக்கெடுப்பு வருகிறபோது, நீங்கள் division கேட்டிருக்க வேண்டுமா இல்லையா? அதுதானே சட்டம்.

Division கேட்டிருந்தீர்களேயானால், உங்கள் எதிர்ப்பு பதிவாகி இருக்கும் அல்லவா! அதையெல்லாம் விட்டு விட்டு, இப்போது மாணவர்களுடைய கல்லறையின்மீது ஏறி நின்று அரசியல் செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைத்தீர்கள் என்றால், கோயபல்ஸ்கூட, உங்களைப் பார்த்து வெட்கப்பட்டு விடுவாரா, இல்லையா! (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீட் தேர்வு என்பது முழுக்க, முழுக்க திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆதரவோடு, காங்கிரஸால் கொண்டு வரப்பட்டது. (குறுக்கீடு) சரி சார், நீங்கள் என்ன செய்தீர்கள்? ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இதில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைக் கேட்பீர்களானால், இந்த அவையின் முன்பாக நான் பேச கடமைப்பட்டிருக்கின்றேன்.

2020 செப்டம்பர் 15] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற பொது நடைமுறை விதிகளின்படி. . . (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் பேசும்போது குறுக்கிட்டுப் பேசக் கூடாது. அத்தியாயம் 14, பிரிவு 87, உட்பிரிவு (3)–ன்படி பாதுகாக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழக அரசு இந்தச் சட்டத்திற்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தது என்பதை இந்த அவையில் பதிய வைக்க வேண்டும். ஏனென்றால் இது வரலாற்றுப் பெட்டகம். நாளைக்கு வருகின்ற சந்ததியினர் இதை எடுத்து படித்துப் பார்க்கும்போது, அப்போது அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், மறைந்த அம்மா அவர்களும் நீட் தேர்விற்கு எதிராக எவ்வாறெல்லாம் போராடி, நமது மாணவர்களைப் பாதுகாக்க முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பது வரலாற்றுப் பதிவாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது, தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு பெற்றார். மீண்டும் 2016 ஆம் ஆண்டிலே நீட் தேர்வு வந்தபோது, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மத்திய அரசிற்கு legal opinion பெறுவதற்காக அனுப்பப்பட்டது. Attorney General என்றழைக்கப்படும் இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் நமக்கு சாதகமான ஒரு opinion–ஐ கொடுத்தார். அந்த opinion சட்டத் துறையின் ஒப்புதலுக்காகச் செல்கிறது. சட்டத் துறையின் ஒப்புதலைப் பெற வேண்டும். தமிழ்நாட்டிற்கு விலக்கு கொடுக்கலாம் என்று சட்டத் துறையும் சம்மதம் தருகிறது. அடுத்தபடியாக சுகாதாரத் துறைக்கு அந்தக் கோப்பு செல்கிறபோது, இங்கிருந்து ஒருவர் புறப்பட்டுச் செல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் அவர்கள் சற்று பொறுமையாகக் கேட்க வேண்டும். யார் சென்றார்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் டெல்லி நண்பராக இருக்கக்கூடிய திரு. ப. சிதம்பரம் அவருடைய அருமை மனைவி நளினி சிதம்பரம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார். சென்றாரா இல்லையா! (குறுக்கீடு) சென்றாரா இல்லையா! ஆக துருப்பிடித்த ஆயுதங்களைக்கொண்டு வந்து, போரிட்டு வரலாற்றைத் திரிக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்காதீர்கள். மாணவருடைய வாழ்க்கையோடு விளையாடாதீர்கள். (குறுக்கீடு) அவர்களுக்கு தவறான நம்பிக்கையைக் கொடுக்காதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[*2020 செப்டம்பர் 15*

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: அதுமட்டுமல்லாமல், 2016–ல் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, இந்த நல்ல வாய்ப்பைக் கெடுத்தார்கள். நான் மூன்றே மூன்று விஷயங்களை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் குழம்பிப் போய் இருக்கிறது. இந்த விஷயத்திலே குழம்பிப் போய் இருக்கிறீர்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே மாணவர்கள் மத்தியில், எடப்பாடியார் அலை வீசிக்கொண்டிருக்கிறது. அரியர் தேர்விலிருந்து விலக்கு என்றதும், நீங்கள் உடனே என்ன சொன்னீர்கள் என்றால், தேர்வுக் கட்டணம் செலுத்த முடியாதவர்களுக்கும் வாய்ப்புக் கொடுங்கள் என்று சொன்னீர்கள் நான்கூட நினைத்தேன். பரவாயில்லையே! அருமையாகப் பேசியிருக்கிறாரே எதிர்க்கட்சித் தலைவர் என்று சொன்னீர்கள். மறுநாள் மத்திய அரசிலிருந்து ஒரு கடிதம் வந்தது என்று ஒரு தகவல் வந்ததுதான் சரி, அப்படியே U–turn எடுத்து, 'நீங்கள் முதலில் செய்யும்போதே தெரியும், இது தவறுதான், இப்படிச் செய்ய முடியாது' என்றுகூறி மாணவர்களுடைய வாழ்க்கையில் விளையாடுகிறீர்கள். மாணவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறீர்கள். எனவே, இந்த U–turn எடுக்கிறது உங்களுக்கு ஒன்றும் புதியது இல்லை. சில்லறை வணிகத்தில், நீங்கள் தமிழர் உரிமையை மீட்கிறவர்களா? சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு கூடாது என்று நாடாளுமன்றத்திலே வருகிறபோது, உள்ளே வாக்களித்துவிட்டு, வெளியே வந்து எதிர்த்தீர்கள். நீங்கள் ** அல்லவா? திராவிட முன்னேற்ற கழகம் ** அல்லவா? (குறுக்கீடு) ஆக, தவறான ஒரு பேச்சை. . . (குறுக்கீடு) இந்த அவையிலே தவறான தகவலைத் தந்து. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) நீக்கிவிட்டேன், உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 செப்டம்பர் 15]

திரு. ஐ.எஸ். இன்பதுரை: ஆக, கச்சத்தீவு என்றாலும் சரி. . . (குறுக்கீடு) நான் இங்கு ஆதாரத்தோடு பேச வந்திருக்கிறேன். கச்சத்தீவுப் பிரச்சினையில் நடந்தது என்ன? கச்சத்தீவைத் தாரை வார்த்து விட்டார்கள். (குறுக்கீடு) அதற்குப் பின்பாக, கச்சத்தீவு தொடர்பாக, திரு. ஜனா கிருஷ்ணமூர்த்தி என்பவர் ஒரு வழக்கு தொடுக்கிறார். (குறுக்கீடு) கச்சத்தீவைத் தாரை வார்த்ததற்காக ஒரு வழக்கு தொடுக்கிறார். அந்த வழக்கிலே, அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: ஒரே நிமிடம், ஒரே நிமிடம். திராவிட முன்னேற்றக் கழக அரசு தாக்கல் செய்த affidavit என்ன தெரியுமா?(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, நீட் சம்பந்தமாகப் பேசத்தான் உங்களை அனுமதித்தேன். நீட் சம்பந்தமாகப் பேசி முடித்துவிட்டு உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீக்கிவிட்டேன். அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதை நீக்கி விட்டேன். இல்லை, இல்லை. இது முறையல்ல. இப்படி நீங்கள் வருவது முறையல்ல. இல்லை, இல்லை. முறையல்ல.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. கரி. இராமசாமி, திரு. செ. ராஜேஷ் குமார், திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. ச. பாண்டி மற்றும் திரு. வி.எஸ். காளிமுத்து ஆகியோர் அவையின் மையப் பகுதியில், பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்பு வந்து திரு. ஐ.எஸ். இன்பதுரை தெரிவித்த பெயரை நீக்குமாறு கோரி முறையிட்டனர்.)

உங்கள் இடத்திலிருந்து பிரச்சினையைச் சொன்னீர்களென்றால், ஒரு வாய்ப்புத் தருகிறேன். உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது. திரு. கரி. இராமசாமி அவர்களே, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

[பேரவைத் தலைவர்] [*2020 செப்டம்பர் 15*

உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. உங்கள் வாய்ப்பிலே உங்களுடைய கருத்துகளைச் சொல்லலாம். இல்லை, இல்லை. அதை நீக்கி விட்டேன். அந்தக் குறிப்பிட்ட வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) அதற்கு நீங்கள் உங்களுடைய உரையில் மறுப்பு சொல்லுங்கள். உங்கள் உரையில் நீங்கள் மறுப்பு சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு குறித்து உச்ச நீதிமன்றத்தில் ஆஜரானார்களா, இல்லையா? நடந்தது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) நடந்தது உண்மையாக இருந்தால் அதனைப் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) தவறாக இருந்தால் அதனை நீக்கிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடுகள்) திரு. கரி. இராமசாமி அவர்களே, முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பிரின்ஸ், திரு. கரி. இராமசாமி உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அந்த வாய்ப்பில், அவர் பேசியதற்கு என்ன மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, கண்டிப்பாக நீங்கள் மறுப்பு தெரிவிக்கலாம். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியில் மாண்புமிகு பேரவைத் தலைவரின் மேசைக்கு முன்புறம் வந்து நின்று, உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள் பேசிய கருத்தை நீக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தினர்.)

நீங்கள் இதுபோல் அவையின் மையப் பகுதிக்கு வந்து நின்று வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, இது சரியல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பிரின்ஸ் மற்றும் திரு. கரி. இராமசாமி அவர்களே, உங்களை நான் வற்புறுத்தி உங்களது இருக்கைக்குச் செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

2020 செப்டம்பர் 15] [பேரவைத் தலைவர்]

நீங்கள் தொடர்ந்து இதுபோல் செய்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியது வரும். (குறுக்கீடுகள்) இல்லை, அது முறையல்ல. (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அப்படியெல்லாம் இல்லை. உங்களுக்கு வாய்ப்பு கேட்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) உங்களைப் பேசுவதற்கு அழைத்திருக்கிறேன் அல்லவா? அதுபோல் அவர்களெல்லாம்.... (குறுக்கீடுகள்) இதெல்லாம் எனது உரிமை. (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) எனக்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். உங்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது. திரு. கரி. இராமசாமி, அடுத்து நீங்கள்தான் பேசப்போகிறீர்கள். உங்களது கருத்துகளை நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அந்த வாய்ப்பில் நீங்கள் பேசுங்கள். உங்களது கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்புறம் நின்றுகொண்டு தங்களது கருத்துகளை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தனர்.)

திரு. கரி. இராமசாமி அவர்களே, திரு. பிரின்ஸ் அவர்களே, திரு. ராஜேஷ் குமார் அவர்களே, நீங்கள் இப்படிச் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இப்போது உங்கள் இடத்திற்குப் போகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்து அவைக்கு ஒவ்வாத கருத்து அல்ல. (குறுக்கீடுகள்) அவைக்கு ஒவ்வாத வார்த்தையாக இருந்தால், அதனை நான் நீக்கிவிடுவேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீதிமன்றத்தில், ஒரு வழக்கில் அவர் ஆஜரானார் என்றுதான் சொல்லியிருக்கிறாரே தவிர, வேறொன்றுமில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் பிடிவாதமாக அவையைத் தொடர்ந்து நடத்த இடையூறு செய்து கொண்டிருக்கிறீர்கள். இது முறையல்ல. உங்களை நான் எச்சரிக்கிறேன். உங்கள் இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களை நான் எச்சரிக்கிறேன். நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதே பொருள் குறித்து பலமுறை இந்த அவையிலே விவாதம் நடந்திருக்கின்றது. அவையெல்லாம் இந்த அவையிலே பதிவாகியிருக்கின்றன. இது ஒன்றும் முதல் முறை அல்ல. ஆகவே, நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். திரு. கரி. இராமசாமி, நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

[பேரவைத் தலைவர்] [*2020 செப்டம்பர் 15*

நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுங்கள். அந்தக் கருத்தை மறுத்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

நண்பகல் 12–00

தேவையில்லையென்றால், விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கரி. இராமசாமி உட்பட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக்காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்புறம் கீழே அமர்ந்தனர். பின்னர் அவர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சில தேவையற்ற செய்திகளை, கருத்துகளை இங்கே பதிவு செய்திருக்கிறார். அவருக்கு சில விளக்கங்களை நான் எடுத்துச்சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறேன். அதற்குத் தாங்கள் அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

NEET தேர்வைப் பொறுத்தவரைக்கும் நான் அப்போதும் சொன்னேன், தொடக்கத்தில் பேசும்போதும் சொன்னேன். அதை தமிழகத்தில் நுழைய விடாமல் தடுத்தது தி.மு.க. ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து NEET தேர்விற்குத் தடை பெற்றதும் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) NEET தேர்வு இரத்து என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்குக் காரணமாக இருந்ததும் (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர்ந்த வழக்குதான் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தி.மு.க. இருக்கும்வரை NEET தேர்வு தமிழகத்திற்குள் நுழையவில்லை; நுழைய விடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பா.ஜ.க. 2014–ல் மத்தியில் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, NEET தேர்வை இரத்து செய்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் திரும்பப் பெற்றபோது

2020 செப்டம்பர் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

அமைதி காத்தது அ.தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. 2016–ல் அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் வந்த பிறகுதான் NEET தேர்வு தமிழகத்திற்குள் நுழைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. மத்திய பா.ஜ.க. அரசு வலுக்கட்டாயமாக NEET தேர்வை 2017–2018–ல் திணித்தபோது அதை வேடிக்கை பார்த்ததும் நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல்தான், தேசிய மருத்துவ ஆணைய மசோதா விவாதத்தின்போது, NEET தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று மாநிலங்களவையில் எங்களுடைய உறுப்பினர் திருச்சி சிவா அவர்கள் தி.மு.க. சார்பில் ஒரு திருத்தம் கொடுத்தார். அந்தத் திருத்தத்தின்மீது வாக்கெடுப்பு 1–8–2019 அன்று நடைபெற்றபோது அவருக்கு ஆதரவு தர மறுத்ததும் அ.தி.மு.க. அரசுதான். அதை மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) NEET தேர்விற்கு விலக்களிக்கக் கோரும் மசோதாக்களுக்கு ஆதரவு அளித்தது தி.மு.க.; 3 வருடங்களாக ஒப்புதல் பெற முடியாமல் தோற்றுப் போயிருப்பது உங்களுடைய அ.தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மசோதாக்கள் திருத்தியனுப்பப்பட்டபோதும்கூட மறைத்து, 'காரணம் கேட்கிறோம்' என்று கூறி, காலத்தைக் கடத்தி, மீண்டும் இதே அவையில் நிறைவேற்றி அந்த மசோதாக்களை சட்டமாக்கக்கூடிய வாய்ப்பைக் கோட்டை விட்டதும் அ.தி.மு.க. அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புத் தருகிறேன்; வாய்ப்புத் தருகிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின்: நான் பேசி முடித்துவிடுகிறேன். இன்னும் 2, 3 கருத்துகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: நான் பேசி முடித்தவுடன் பதில் சொல்லுங்கள், நான் கேட்கிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்ததும், சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

[*2020 செப்டம்பர் 15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் பிறகு பேசலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: தி.மு.க. ஆட்சியில், NEET தேர்வு சட்டப் போராட்டத்திலும் வெற்றி பெற்றோம். அதற்கு முன்பாக நுழைவுத் தேர்வு இரத்து தொடர்பான சட்டப் போராட்டத்திலும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால், NEET தேர்வை எதிர்த்து சட்டப் போராட்டம் என்று கூறி, அதில் தோற்றுப் போயிருப்பது உங்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய தி.மு.க.-வினுடைய ஆதரவையும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லை; சட்டமன்றத்தின் ஒப்புதலையும் நீங்கள் பெறவில்லை. ஆகவே, நீங்கள் மத்திய அரசிற்குத் துணைபோகக்கூடிய நிலையில்தான் இந்த NEET பிரச்சினையில் இருந்திருக்கிறீர்கள் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக இந்த அவையில் பதிவு செய்து, என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் பதிலுரையில் எல்லாவற்றையும் சொல்லிவிடலாம். (குறுக்கீடு) ஒரே ஒருவர் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் மட்டும் பேச வேண்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே NEET தேர்வு நடைமுறையின் காரணமாக நாம் சந்தித்து வரக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு விளக்கங்களை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். NEET தேர்வை நாமெல்லோரும் இணைந்து எதிர்க்கிறோம், அதே நேரத்தில் குறை சொல்வதன் மூலமாக எதையும் நாம் சாதிக்க முடியாது. ஆனால், ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் பல நிலைகளில் எதிர்க்கட்சியையும், காங்கிரஸ் கட்சியையும் குறை சொல்லக்கூடிய வகையில், நம்முடைய எதிர்ப்பை பலவீனப்படுத்தக்கூடிய வகையில், பல்வேறு பதிவுகளைச் செய்திருக்கிறார்கள்.

2020 செப்டம்பர் 15] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

பிற்பகல் 12–05

நீட் தேர்வு என்பது மாநில சுயாட்சிக்கு வேட்டு வைக்கக்கூடிய ஒரு முயற்சியாகும். பல்வேறு நிலைகளிலே தமிழக மக்களும், மாணவர்களும் மன அழுத்தத்தைச் சந்தித்து, தாலிக் கயிற்றைக்கூட கழற்ற வேண்டுமென்று கட்டாயப்படுத்திய, கண்ணீர் வடிக்கக்கூடிய காட்சிகளையெல்லாம் நாம் பார்த்தோம். பல்வேறு மாணாக்கர்கள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். மாநில அளவிலே ஏதாவது ஒரு தேர்வினை நடத்தினால் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், நடைமுறைக்கு மாற்றாக, பன்னிரண்டு வருடங்களாக அவர்கள் படித்த படிப்புக்கு மாற்றாக ஒரு புதிய நடைமுறையை மத்திய அரசாங்கம் கொண்டு வந்து, ஏழை, எளிய மக்கள், கிராமப்புற மக்கள் மருத்துவப் படிப்புக்குச் செல்ல முடியாத அளவிற்கு ஒரு புதிய நடைமுறையைக் கொண்டு வந்ததன் காரணமாகத்தான் பல்வேறு இன்னல்களை நாம் சந்தித்து வருகின்றோம். NEET தேர்வு எழுதியவர்களில், தேர்ச்சி பெறுகின்ற அனைவருக்கும் மருத்துவம் படிக்கக்கூடிய வாய்ப்புகள் கிடைக்காது என்றாலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான வரலாற்றை அவையில் பதிவு செய்துவிட்டு, அதற்கு விளக்கம் கோருவது என்பது ஏற்புடையதல்ல. இரண்டாவதாக, உறுப்பினர் அவர்கள் தவறான வரலாறுகளைப் பதிவு செய்கின்றார். நான் அவசியம் குறுக்கிட்டுப் பேச வேண்டும். நான் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களிடம் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்கிறேன். NEET என்ற வார்த்தை, அதாவது, National Entrance Eligibility Test என்கிற வார்த்தை எப்பொழுது இந்தியாவிற்குள் நுழைந்தது? அப்போது யார் ஆட்சியில் இருந்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணியில் இருந்தீர்கள். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதற்கு மட்டும் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள் பதில் சொல்லிவிட்டு, அவரது உரையைத் தொடரட்டும். (குறுக்கீடுகள்)

[*2020 செப்டம்பர் 15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். இதுபோன்று இவர்கள் குரல் எழுப்பினால் அவர் எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடுகள்) தவறான தகவல் கிடையாது. அது உண்மையான தகவல். (குறுக்கீடுகள்) காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததா, இல்லையா? மறுக்க முடியுமா? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரை சொல்லச் சொல்லுங்கள். யாருடைய ஆட்சியில் இது வந்தது? NEET தேர்வு எப்போது வந்தது? அதை யார் அறிமுகப்படுத்தினார்கள்? இந்த நாட்டிற்கே தெரியும். இது ஒன்றும் தெரியாதது கிடையாது. (குறுக்கீடுகள்) அகில இந்திய அளவில் கொண்டு வந்தார்கள். தமிழ்நாட்டில் மட்டும் கிடையாது. Tamilnadu included. (குறுக்கீடுகள்) அதைத் தனியாக மாற்றிக் கொடுக்கவில்லை. 2011–ல் ஆட்சிக்கு வந்தபோது, இதை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று வாதாடி, தீர்ப்பு பெற்றது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதை மறுக்க முடியுமா? இதை எதிர்த்து யார் வாதாடினார்கள்?

இன்றைக்கு வெளிநடப்பு செய்திருக்கிறார்களே! இத்தனை பேர் வாதாடுவதற்குக் காரணம் என்ன? காரணகர்த்தா யார்? இதுபோன்ற பிரச்சினை வந்தது யாரால்? சில பேர், தமிழ்நாட்டில் தன்னுடைய திறமையால்—NEET தேர்வு இரத்து செய்யப்பட்டதை மீண்டும் கொண்டு வந்ததற்கு யார் காரணம்? (குறுக்கீடு) நாங்கள் இல்லை. நீங்கள் கூடவே வைத்திருக்கிறீர்களே! பெயர் சொல்லி வெளிநடப்பு செய்தார்கள் அல்லவா! அவர்கள் நீதிமன்றத்தில் வாதாடி, வெளியில் வந்து முற்றுப்புள்ளி வைத்துவிடுவோம் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து வீணாகப்போய், நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டீர்கள். நீங்கள் கூட்டணியில் இடம்பெற்று, 2010–ல் NEET தேர்வைக் கொண்டுவந்ததனால்தான். . .(குறுக்கீடு) 13 பேர் மரணத்திற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகம்தான். இதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுப் பிழையை நீங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், உரையை முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தை நீட்டிக்க விரும்பவில்லை. ஒரே ஒரு புள்ளிவிவரம் மட்டும் சொல்கிறேன். தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஒரு தகவலைப் பெற்றிருந்தோம். அதில், 2015–2016 ஆம் கல்வியாண்டில் தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்த தமிழ் வழி கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 456. அதேபோன்று, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அன்றைக்கு படித்த மாணவர்கள் 54 பேர். ஆனால், 2018–2019–ல் தமிழ் வழி கல்வி பயின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை வெறும் 88 பேர். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வெறும் 18 பேர். 456 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை இப்போது வெறும் 88 ஆகக் குறைந்திருக்கிறது. தனியார் கல்லூரிகளில் 54 மாணவர்களாக இருந்த எண்ணிக்கை இப்போது 18 ஆகக் குறைந்திருக்கிறது. தமிழ் சமுதாயத்திற்கு இது வஞ்சிக்கப்பட்ட நடைமுறையா, இல்லையா என்பதை இதிலிருந்து மக்கள் தீர்மானித்துக்கொள்ளட்டும். நமக்கு மத்தியில் அடித்துக்கொள்வதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. 'அன்று கொண்டு வந்தது' என்று நீங்கள் சொன்னாலும், அதை மறுப்பதற்குரிய காரணங்களை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். இது நடைமுறைப்படுத்தப்பட்டது இந்த ஆட்சியில்தான். இதற்கு தமிழக மக்கள் தக்க பாடத்தைத் தருவார்கள் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதை நாம் ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும், தற்கொலைகளைத் தடுக்க வேண்டும் என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறுகளை யாரும் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. (குறுக்கீடு) பலமுறை இந்த அவையிலே வரலாறுகளை அழுத்தமாகவும் ஆணித்தரமாகவும் நான் தெரிவித்திருக்கின்றேன். (குறுக்கீடு)

[*2020 செப்டம்பர் 15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்கார்ந்துகொண்டே பேசக் கூடாது. இது என்ன முறை? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசினால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: நம்முடைய காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மிக மிகச் சாதுரியமாக நீங்கள் பலமுறை அவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்தும், அவர்கள் ஏன் வெளியேறினார்கள் என்பது அவர்களுடைய மனசாட்சிக்குத் தெரியும். ஏனென்று சொன்னால், காங்கிரஸ் கட்சிக்கு 'நீட்' பற்றிப் பேசுவதற்கு எந்த முகாந்திரமும் எந்தக் காலத்திலும் கிடையாது. ஏனென்றால் அது வரலாற்றுப் பிழை. (மேசையைத் தட்டும் ஒலி) 27–12–2010 என்பது வரலாற்றிலே ஒரு கருப்பு நாள். நான் ஒரேயொரு கேள்வியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. அபூபக்கர் அவர்களிடம் கேட்டேன். 27–12–2010 வரை NEET (National Eligibility cum Entrance Test) என்ற வார்த்தை யாருக்குத் தெரியும்? யார் கொண்டு வந்தார்கள்? அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இருந்ததா? இல்லையே! திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கூட்டணியிலிருந்தபோது, மத்தியில் காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்தபோதுதான் MCI Notification ஒன்றை வெளியிட்டார்கள். அதுவரை 'நீட்' என்கிற ஒரு வார்த்தை யாருக்குமே தெரியாதே! எனவே, காங்கிரஸ் ஆட்சியில்தான் 27–12–2010–ல் இந்திய மருத்துவக் குழுமம் (MCI) முதன்முதலாக இந்தியா முழுவதற்குமான ஒரு Notification–ஐ வெளியிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறகு வாய்ப்புத் தருகிறேன், இருங்கள். (குறுக்கீடு) தருகிறேன், இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, 'நீட்' என்கின்ற இந்த concept–ஐ முதன்முதலில் உருவாக்கி, இந்தக் கொடூரத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்திய நாள் 27–12–2010. அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியோடு, திரு. மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலான காங்கிரஸ் அரசு. அதில்

2020 செப்டம்பர் 15] [திரு. சி.வி. சண்முகம்]

எங்களுக்கு சம்பந்தமில்லை என்று இன்றைக்கு சொல்கிறவர்கள், அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. காந்தி செல்வன் அவர்கள்தான் சுகாதாரத் துறையின் இணை அமைச்சராக இருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது துறையின்கீழ் இருந்த அமைப்புதான்–Medical Council of India–இந்த Notification–ஐ, 'நீட்' என்ற concept–ஐ அறிமுகப்படுத்தியது. இதற்கு தி.மு.க. என்ன பதில் சொல்கிறது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இன்னும் சொல்லப்போனால், இந்த Notification–ஐ Cabinet approval பெற்றுத்தான் வெளியிட வேண்டும். அதே Cabinet–ல்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு அங்கம் வகித்தது. அதைத்தான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். ஆக, நான் ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதுவரை 'நீட்' என்ற வார்த்தை யாருக்குமே தெரியாது.

1984–லிருந்து 20 ஆண்டுகாலம் Anna University நடத்தும் Entrance Examination–ல் 50 marks, +2–வில் 150 marks–ஐயும் சேர்த்து 200 மதிப்பெண்கள் அடிப்படையில் admission நடந்து கொண்டிருந்தது. 2005–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதுதான், நுழைவுத் தேர்வு என்ற concept என்பதே வேண்டாம் என்றார்கள். +2 மதிப்பெண்கள் அடிப்படையில் ஒரு நேர்மையான தேர்வு, வெளிப்படையான தேர்வு தமிழ்நாட்டில் நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நுழைவுத் தேர்வு concept என்பதே வேண்டாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 2005–ல் அரசாணை பிறப்பித்தார்கள். அரசாணை பிறப்பித்த பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. அவர்கள் குடியரசுத் தலைவரிடம் assent வாங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன கொள்கையை கையிலே எடுத்தார்களோ, பொது நுழைவுத் தேர்வு என்பதே வேண்டாம், entrance examination வேண்டாம் என்று அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்டமாக வந்தது. இது first part, முடிந்தது.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2020 செப்டம்பர் 15*

தற்போது நான் பேசவிருப்பது second part. Second part–ல் 27–12–2010–ல் இந்திய அரசின் சார்பில் இந்தியா முழுவதிலுமுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் ஏற்புடைய Notification–ஐ MCI வெளியிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். அதில் எப்படி தமிழ்நாட்டிற்கு மட்டும் நாம் விலக்கு பெற முடியும்? ஆனால், அப்போது எதிர்க்கட்சியாக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'நீங்கள் Notification–ஐ வெளியிடுகிறீர்கள். மற்ற மாநிலங்களைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. குறைந்தபட்சம் தமிழ்நாட்டிற்கு விலக்கு (exemption) கொடுங்கள்' என்று கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய மத்திய அரசு அதையும் காதிலே வாங்கிக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் முக்கியமான point.

தற்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு point–ஐச் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டபோது அ.இ.அ.தி.மு.க. அரசு அமைதி காத்ததாகச் சொன்னார்கள். நான் ஆணித்தரமாகச் சொல்கின்றேன், உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பினை எப்போது பெற்றோம்? 18–7–2013–ல் பெற்றோம். 2013–ல் யார் ஆட்சியில் இருந்தார்கள்? இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூத்த வழக்கறிஞர்களை வைத்துப் போராடி, வாதாடி சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய 3 அமர்வுகளில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வில், 18–7–2013–ல் 'நீட்' என்பது கிடையாது என்ற இந்தியா முழுவதற்குமான ஓர் உத்தரவைப் பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் பாயிண்ட்.

பிற்பகல் 12–15

அடுத்ததாக, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பாயிண்ட்டுக்கு வருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நாங்கள் உத்தரவை வாங்கிவிட்டோம், போராடிவிட்டோம். (குறுக்கீடு) நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். நாங்கள் சட்டப் போராட்டம் நடத்தி வாங்கி விட்டோம். இதோடு விட்டு விடுங்கள். இதற்குமேல் எதுவும் வேண்டாம். இப்போதாவது விட்டு விடுங்கள் என்று நாம் போராடுகிறோம். அப்பொழுதும் கேட்கவில்லை. பத்தே நாட்களில் மத்திய அரசு உடனே திரும்பி வந்து அந்த Petition–க்கு Revision

2020 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

Petition போடுகிறார்கள், இப்போது அதுதான் பிரச்சினை. தயவுசெய்து Revision Petition போடாதீர்கள் என்று கடிதம் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்கள்தான் அப்போதைய பாரதப் பிரதமர். திரு. மன்மோகன் சிங் கேட்டாரா? இப்போது காங்கிரஸ் அவையில் இருந்திருக்க வேண்டும். இல்லாததுதான் இப்போது எனக்கு வேதனையாக இருக்கிறது. அதற்குள் அவர்கள் வெளியே போய்விட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், இது மாணவர்களுடைய உணர்வு, பெற்றோர்களுடைய உணர்வு, தமிழனுடைய உணர்வு என்று. அதில் எந்த மாற்றமும் இல்லை. அந்த உணர்வுகளில்தான் பேசுகிறோம். அதே உணர்வுகளில்தான் பேசுகிறோம். இன்றைக்கு துடிக்கின்ற இந்த உணர்வு, இன்றைக்குப் பேசுகின்ற இந்த உணர்வு, அன்றைக்குத் துடித்திருந்தால் 2010–ல் MCI மூலம் ஒரு notification கொண்டு வரப்பட்டபோது, வரலாற்றில் கருப்பு நாளாக அமைந்த அன்று துடித்திருந்தால், ஏன் இந்த மரணங்கள் நடக்க வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மரணங்களுக்கு யார் பொறுப்பு? இதுதான் கேள்வி. இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். இந்த மரணங்களுக்கு யார் பொறுப்பு? (குறுக்கீடு) அந்தக் கேள்விக்கும் பதில் சொல்கிறேன்.

இதிலே ஒரே ஒரு கேள்வி. முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கக் கூடாது. ஒருபக்கம் பிள்ளையை ஆட்டிவிட்டு, நாங்கள் பக்கத்திலே போகும்போது பிள்ளை அழவில்லையென்று சொன்னால், பிள்ளையைக் கிள்ளிவிட்டது யார்? பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்ற பழக்கம் உங்களுக்குக் கைவந்த கலை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், வரலாற்றில் 2010–ல் NEET என்ற விஷயத்தை அறிமுகப்படுத்தியாகிவிட்டது. அம்மா அவர்கள் 2013–ல் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றியும் பெற்றாகிவிட்டது. மறு ஆய்வு மனு போடாதீர்கள் என்று சொல்கிறோம்; போட்டார்கள். போட்டதற்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறு ஆய்வு மனுவைத் திரும்பப் பெறுங்கள் என்று சொல்கிறார்கள். Revision petition போட்டீர்கள். வெற்றி கிடைத்துவிட்டது. அந்த Revision petition–ஐ withdraw செய்யுங்கள் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆதாரம் இருக்கிறது. அப்படி கடிதம், கொடுத்தும் அப்போதும் Revision petition–ஐ அவர்கள் withdraw செய்யவில்லை. மூன்றாண்டுகாலம் சட்டப் போராட்டம் நடக்கிறது. அதற்குப் பிறகுதான் அந்த 3 நீதிபதிகள் அடங்கிய Bench–ல்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2020 செப்டம்பர் 15*

நமக்கு தீர்ப்பு வந்தது. 2 நீதிபதிகள் NEET வேண்டாமென்று நமக்கு சாதகமாகத் தீர்ப்பு கொடுத்ததால் நமக்குக் கிடைத்தது. ஒரு நீதிபதி மட்டும் எதிராகக் கொடுத்தார்கள். அந்த ஒரு நீதிபதியினுடைய தலைமையில் திரும்ப Bench வருகிறது. அப்போது அவருடைய தலைமையில் Bench வருகிறபோது, அப்போதுதான் சங்கல்ப் என்ற தொண்டு நிறுவனம் தொடர்ந்த வழக்கில் மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மிகக் கடுமையாக, 2016–ல் அப்போது தேர்தல் நேரம், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கிறார்கள். நான் சொல்கிறேன்; அப்போது எந்த மாநிலமும் வரவில்லை. கூட்டணியில் இப்போது பேசுகிறார்களே, காங்கிரஸ் ஆண்ட மாநிலங்கள் அன்றைக்கு துணைக்கு வரவில்லை. கம்யூனிஸ்டு ஆண்டு கொண்டிருக்கக்கூடிய மாநிலம் துணைக்கு வரவில்லை. எந்த மாநிலமும் துணைக்கு வரவில்லை. தன்னந்தனியாக 15 நாட்கள் உச்ச நீதிமன்றத்திலே ஒட்டுமொத்த இந்தியாவிற்காக NEET வேண்டாமென்பதற்காகப் போராடிய, வாதாடிய ஒரே மாநிலம் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு வாதாடியும் உச்ச நீதிமன்றத்திலே நமக்கு எதிரான தீர்ப்பு வந்துவிட்டது. அதாவது, ஏற்கெனவே கொடுத்தத் தீர்ப்பைத் திரும்பப் பெற்றார்கள். Return வாங்கிவிட்டு திரும்ப NEET தான் என்று தீர்ப்பு கொடுக்கிறார்கள். இதிலே, இங்கே யார்மீது தவறு இருக்கிறது? எங்கேயாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது தவறு இருக்கிறதா? (குறுக்கீடு) வழக்காடியது வி.வி. கிரி என்ற நம்முடைய மூத்த வழக்கறிஞர். பி.பி. ராவ் என்ற மூத்த வழக்கறிஞரை வைத்து 15 நாட்கள் வழக்காடினார்கள். திரு. முஹம்மது அபூபக்கராக இருக்கட்டும், மரியாதைக்குரிய அண்ணன் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவராக இருக்கட்டும், தயவுசெய்து நீங்கள் இந்த வரலாறுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படியெல்லாம் கிடைத்ததற்குப் பிறகும் அம்மா அவர்கள் விடவில்லை. 2017–க்குப் பிறகும் விடாமல், கொண்ட கொள்கையில் உறுதியாக எப்போதும் இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓராண்டுக்கான விலக்கைப் பெற்றுக் கொடுத்தார்கள். இது எல்லோருக்கும் தெரியும். இந்தியா முழுவதும் வந்துவிட்டது. எல்லா மாநிலங்களும் இதை ஏற்றுக் கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்குமே தெரியும். Counselling–ஐ நாம் கடைசியாக நடத்துகிறோம். கம்யூனிஸ்டு ஆளக்கூடிய கேரளத்தில் என்ன நடந்ததென்றால்

2020 செப்டம்பர் 15][டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

NEET–ன்படி போகாத மாணவர்களுக்கு அவர்கள் admission போட்டார்கள். அதற்குப் பிறகு சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றி ratification செய்ய வேண்டும், இதை regularise செய்ய வேண்டும். 'Management quota–ல் மட்டும் NEET pass செய்யாதவர்களுக்கு நாங்கள் admission போட்டோம்' என்று சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அது உச்ச நீதிமன்றத்திற்குப் போய் திரும்ப அங்கேயும் squash ஆகிறது. நாம் எல்லோரும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவர்கள்தானே! உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் விளைந்த ஒரு நிகழ்வை, இன்றைக்கு யார், யார்மீது குற்றம் சொல்வது என்ற கேள்வியைத்தான் நான் முன்வைக்கின்றேன். யார் யாரைக் குற்றம் சொல்ல முடியும்? ஆனால், நாங்கள் ஒன்றை ஆணித்தரமாகக் குற்றம் சொல்ல முடியும். எங்கே தொடங்கியது? இன்றைக்கு பாம்பு கடிக்கிறதென்றால், பாம்பு விஷப் பாம்பு என்றால், இந்தப் பாம்பு எப்போது வந்தது? யார் பாம்பை எடுத்து வெளியே விட்டார்கள்? இதுதானே பிரச்சினை. எப்பொழுது பாம்பை விட்டது? பாம்புக்கு பால்வார்த்தது யார்? இந்த NEET என்பது ஒரு விஷ விதை என்று சொன்னால், இந்த விதையை விதைத்தது யார்? காங்கிரஸ் அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும்தான் இந்த விதையை விதைத்தது. இப்போது, விதையை நீங்களே விதைத்துவிட்டு, பாம்புக்குப் பால் வார்த்துவிட்டு, நாங்கள் இருக்கின்ற வரை வரவில்லையென்று சொன்னால், இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

கடைசி, மூன்றாவது part–க்கு வந்துவிடுகிறேன். ஓராண்டு விலக்களிக்கப்பட்ட பின்னர் அம்மாவின் மறைவிற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, தலைமைச் செயலாளர், எங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு, நேரடியாக டெல்லிக்குச் சென்றார்கள். பலமுறை கடிதம் எழுதினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் memorandum கொடுத்தார்கள். என்னையும், அரசுச் செயலாளரையும் நேரடியாக அழைத்துச் சென்று பாரதப் பிரதமரிடம் நேரடியாகப் பேசி எங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு NEET தேர்விலிருந்து விலக்கு தர வேண்டும் என்று மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நேரடியாக Prime Minister அவர்களிடம் கடிதம் கொடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டபொழுது, 'உடனே செய்துவிடுகிறேன்' என்று மாண்புமிகு

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2020 செப்டம்பர் 15*

பாரதப் பிரதமர் அவர்கள் சொன்ன பிறகு நடந்த வரலாறு தெரியும். திரும்பவும் மத்திய அரசு, ஓராண்டுக்கு மட்டும் exemption கேட்டு தீர்மானம் நிறைவேற்றுங்கள் என்று சொன்னார்கள். உடனே ஓராண்டு வரைக்கும் விலக்கு கேட்டு தீர்மானம் போட்டோம். 'கடந்த வருடம் அம்மா ஓராண்டுக்கு விலக்கு வாங்கினார்கள், கொள்கைதான் முக்கியம் என்று நாம் ஓராண்டுக்கு விலக்கு வேண்டும்' என்று resolution போட்டு மத்திய அரசுக்கு submit செய்தோம். அவ்வாறு மத்திய அரசுக்கு submit செய்த பிறகுதான் climax. இன்றைக்கும் வரலாற்றை யாரும் மறைக்க முடியாது, file–ஐ மறைக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் ஒப்புதலைப் பெற்றோம். HR என்று சொல்லக்கூடிய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒப்புதலைப் பெற்றோம். அங்கேதான் இருந்தோம். பாராளுமன்றத்தின் படிக்கட்டுகளில் புரண்டு புரண்டு பணியாற்றினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 மூத்த I.A.S. Officers–ஐ அனுப்பினார்கள். இங்கேயும், அங்கேயும் எல்லா இடங்களுக்கும் அரசு சார்பில் நாங்கள் சென்று பணியாற்றினோம். அப்படியெல்லாம் செய்து முடித்து, சுகாதாரத் துறையிடம் ஒப்புதல் வாங்கக்கூடிய அந்த நேரத்தில். . . (குறுக்கீடு) அவர்கள் பெயரை எப்படி வரலாற்றில் சொல்லாமல் இருக்க முடியும்? தமிழ் உணர்வு எல்லோருக்கும் இருக்க வேண்டுமல்லவா! இதே உணர்வு எல்லோருக்கும் இருக்க வேண்டுமல்லவா! ஓர் ஆண்டுக்கு விலக்கு பெறக்கூடிய அந்தத் தருவாயில், இங்கே counselling–ஐ நிறுத்திவைத்திருக்கிறோம். மாணவர்கள் காத்திருக்கிறார்கள். பட்டியலை ready–ஆக வைத்திருக்கிறோம். +2 மார்க் அடிப்படையில் பட்டியல் போட்டு ready–ஆக வைத்திருக்கிறோம். ஒரே பட்டனை அழுத்தினால் எல்லோருக்கும் merit list போட்டுவிடலாம். இந்தக் காலக்கட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் திரு. ப. சிதம்பரம் அவர்களுடைய மனைவி நளினி சிதம்பரம் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் திடீரென்று வழக்கில் வாதாடினார். எந்தக் காலத்திலும் NEET–தான், ஓராண்டு விலக்கு தரக் கூடாது என்று வாதிட்டவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி நளினி சிதம்பரம் அவர்கள்தானே! இதை யாராவது மறுக்க முடியுமா? இன்றைக்கு You Tube–ல் இருக்கின்றதே, அதை நீங்கள் போட்டுப் பாருங்கள்.

அதுமட்டுமல்ல, அவர்கள் சொன்னார்கள், 'இனி தமிழ்நாட்டுக்கு எந்தக் காலத்திலும் NEET விலக்கு வராது, வர விடமாட்டோம், தமிழ்நாட்டுக்கு எந்தக் காலத்திற்கும் NEET

2020 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

விலக்கு வராது, +2 மார்க் அடிப்படையில் எந்தக் காலத்திலும் இனி admission நடக்காது. +2 மார்க் அடிப்படையில் தேர்வு என்பதை நான் முடித்துவிட்டேன், இனிமேல் அதற்குச் சட்டத்தில் இடமில்லை' என்று வெளியில் வந்து பகிரங்கமாக, நம்முடைய உணர்வுகளை மதிக்காமல், பதைபதைக்கக்கூடிய வகையில் அந்தத் தீர்ப்புக்குத் துணைநின்றவர் திருமதி நளினி சிதம்பரம் அவர்கள். அதனால்தான் குற்றஞ்சாட்டுகிறேன். ஏன் இங்கே காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு கோபம் வருகிறது. ஒரு வார்த்தை சொல்லலாம் அல்லவா? அம்மா, இது தமிழ் மண்ணின் உணர்வைப் பொறுத்த விஷயம், மாணவர்களுடைய உணர்வைப் பொறுத்த விஷயம், NEET என்பது பெற்றோர்களுடைய கனவு என்று சொல்லலாம் அல்லவா? ஒரேயொரு விஷயத்தை simple ஆக ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இவ்வளவு பேசுகிறோமே எதற்காகப் பேசுகிறோம்? நம்முடைய குழந்தையை டாக்டராக்க வேண்டும்; டாக்டராக வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். சுதந்திரம் பெற்று 2011 ஆம் ஆண்டுவரை 64 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1947 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரைக்கும் 64 ஆண்டுகளில் மொத்த MBBS இடங்கள் 1945. மாண்புமிகு அம்மா அவர்கள் சரியாக 6 வருடங்களில் 1,110 seats-ஐ increase செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மூன்று ஆண்டுகளில் 290 seats–ஐ increase செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது எல்லாம் சேர்த்து மொத்தம் 1,400 seats அதிகரித்து இருக்கின்றன. இப்பொழுது 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்று இந்தியாவில் மட்டுமல்ல நாட்டிலேயே வரலாற்றுச் சாதனையாக ஒரே ஆண்டில் 1,650 seats–ஐப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமாக 3,050 seats வரப்போகிறது. வருகிற கல்வியாண்டில்; அதாவது 64 ஆண்டுகளில் உருவான MBBS seats என்பது 1945. இந்த 10 ஆண்டுகளில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து உருவாக்கிய seats என்பது 3,050. 150 விழுக்காடு increase செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்காக increase செய்திருக்கிறோம், நீங்கள் சொல்லுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். வெளியில் கம்யூனிஸ்டு தலைவர்கள் என்ன பேசுகிறார்கள்? நீங்கள்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2020 செப்டம்பர் 15*

11 Medical colleges–ஐக் கொண்டு வருகிறீர்கள். இதில் யார் படிப்பார்கள்? 150 seats–ல் 15% All India quota. இன்றைக்கு 3,000 seats உருவாக்கினோம் என்று சொன்னால், அதில் 15 per cent–தான் All India quota. அதிலும் தமிழ்நாடு மாணவர்கள் வரலாம். மீதி 85 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள்தான் இருப்பார்கள். இந்த MBBS இடங்களை அண்ணா தி.மு.க. அரசு, புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, நம்முடைய முதலமைச்சர் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்காக இத்தனை seats–ஐ உருவாக்குகிறோம்? ஒரு மாணவனுடைய கனவு கருகிவிடக்கூடாது, ஒரு பெற்றோருடைய அந்தக் கனவு கருகிவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

பிற்பகல் 12–25

இன்றைக்கு 'நீட்' தேர்வுக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த காரணத்தினால் எந்த ஏழை மாணவனுக்கும், கிராமப்புற மாணவனுக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான், 150 விழுக்காடாக, இன்றைக்கு 65 ஆண்டுகளிலே பெற்ற வளர்ச்சியை பத்தே ஆண்டுகளில் பெற்றது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசா, இல்லையா சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எப்படி நாம் கொள்கையை விட்டுக் கொடுப்போம்? நீங்கள் சொல்லுங்கள். திராவிட வழியிலே வந்தவர்கள் நாம். எப்படி நம்முடைய உணர்வுகளை விட்டுக்கொடுப்போம்? எப்படி உரிமையை நாம் விட்டுக்கொடுப்போம்? ஆனால், இந்தக் காரண காரியங்களைப்பற்றிப் பேசாமல், இதில் அரசியல் செய்வதுதான் வேதனையாக இருக்கிறது. எல்லோரும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவர்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் விவாதம் செய்தபோது, இதே சட்டமன்றத்தில் அம்மா அவர்கள் சொன்னார்கள்; திராவிட முன்னேற்றக் கழகம் இந்த 'நீட்' பிரச்சினையில், 'தும்பை விட்டு நீங்கள் வாலைப் பிடிக்கிறீர்கள்' என்பதை அம்மா அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். தும்பை விட்டது என்பது உண்மைதான். அது வரலாற்றிலே ஒரு கருப்பு நாள். 27–12–2010 என்பது வரலாற்றிலே ஒரு மிகப் பெரிய கருப்பு நாள். இந்தக் கருப்பு நாளை மறைப்பதற்காகத்தான் இன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போதும் சொல்கிறேன், 'நீட்' எதிர்ப்புக் கொள்கையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தக் காலத்திலும் உறுதியாக இருக்கிறது. ஆனால், மாணவர்களைக் குழப்பக் கூடாது.

2020 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அன்போடு கேட்கிறேன். '8 மாதத்தில் நீட் தேர்வு இரத்து செய்யப்படும்' என்று சொல்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் அதை எப்படிச் செய்ய முடியும்? அந்த வழியை நீங்கள் சொல்லுங்கள், அதை இப்பொழுதே செய்வதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஏனென்றால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாணவர்களைக் குழப்பக் கூடாது. பெற்றோர்களைக் குழப்பக் கூடாது. மாணவர்களையும், பெற்றோர்களையும் குழப்பி, அவர்களைத் திசை மாற்றிவிடக் கூடாது. அதிலேதான் நமக்குப் பிரச்சினை வரும். நீங்கள் 'tiresome' என்று சொன்னீர்களே! அந்த மனச்சோர்வு அதனால்தான் ஏற்படும். ஆனால், தொடர்ந்து அரசியல் அழுத்தம், சட்டப் போராட்டம், உச்ச நீதிமன்றத்தில் மூல வழக்கு என்று எல்லா விஷயங்களிலும் எல்லோரும் எல்லோருடைய மூல உணர்வோடு எல்லாம் சேர்த்துத்தான் தீர்மானம் போட்டோம். எல்லோரும் சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எல்லோரும் சேர்ந்துதான் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். அதனுடைய நிலையும் உங்களுக்குத் தெரியும். ஆனால், அதற்கு provisions இல்லை. ஆனால், இப்போது நீங்கள் 8 மாதங்களில் 'நீட்' தேர்வு என்பது கிடையாது என்ற ஒரு வாக்குறுதியை மாணவர்கள் மனதிற்குச் சொன்னால், அதற்கான வழிவகை என்ன என்பதையும் நீங்கள் சொன்னால், அதை இப்பொழுதே செய்வதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தயாராக இருக்கிறதென்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்து, என்னுடைய விளக்கத்தைத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீட்' பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், கட்சிப் பாகுபாடின்றி போராடுவதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. ஆக, அங்கொன்றும், இங்கொன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய சில குறைபாடுகளை, பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். அதற்கு நாங்கள் சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறோம். எனவே, அதற்கு மீண்டும் விளக்கத்தைச் சொல்ல நான் விரும்பவில்லை. எப்படி இதைப் போக்குவீர்கள் என்று அமைச்சர்

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2020 செப்டம்பர் 15*

கேட்டார். ஜல்லிக்கட்டுப் பிரச்சினை வந்தபோது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் ஜல்லிக்கட்டுக்கும் தடை வந்தது. அப்போது நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். இங்கே துணை முதல்வராக இருக்கக்கூடியவர்தான் அப்போது முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தார்கள். ஆக, அப்பொழுது டெல்லிக்குச் சென்று, வலியுறுத்தி, வற்புறுத்தி, புதிதாக ஒரு சட்டமுன்வடிவையே உருவாக்கி, அதற்காகவே சட்டமன்றம் special ஆகக் கூடி, தீர்மானம் போட்டு அனுப்பி அதை நாம் பெற்றிருக்கிறோம். எனவே, '8 மாதங்களில் கொண்டு வருவோம்' என்று நாங்கள் சொல்வது என்பது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு விரைவிலே வரப்போகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) வந்ததற்குப் பிறகு அந்த முறையைக் கையாண்டு மத்திய அரசை வலியுறுத்துவது, வற்புறுத்துவது, அழுத்தம் கொடுப்பது என்கிற வழியில் செய்வோம். இங்கே மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆட்சி ஓர் அழுத்தம் கொடுக்கிறபோது, அதை நிச்சயமாக மத்திய அரசு பரிசீலிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். அதைத்தான் நீங்கள் ஜல்லிக்கட்டு விஷயத்திலே செய்தீர்கள். அதைத்தான் இந்த நீட் விஷயத்திலும் செய்ய வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கிறேன். எனவே, அதை மீண்டும் நீங்கள் பரிசீலித்து மத்திய அரசுக்கு வேண்டிய அழுத்தத்தை இந்த அரசு தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டுக்கு, நீங்கள் சொன்னதுபோல, ஓராண்டுக்கு நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு சார்பிலே அப்போதைய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்று, விலக்கு பெற்றது என்பது உண்மை. ஆனால், ஜல்லிக்கட்டு என்பது தமிழகத்திலே மட்டும் நடக்கக்கூடிய நிகழ்வு. தமிழகத்திற்கு மட்டுமான நிகழ்வு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆந்திராவிலேயோ, கர்நாடகத்திலேயோ இல்லை. இது ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினை. தமிழகத்தில் மட்டும்தான் இந்தப் பிரச்சினை இருந்தது. ஆனால், 'நீட்' என்பதை இன்றைக்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டு விட்டன. காங்கிரஸ் கட்சி ஆளக்கூடிய, முதலமைச்சராக இருக்கக்கூடிய மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி ஆளக்கூடிய, முதலமைச்சராக இருக்கக்கூடிய மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். நீங்கள் கூட்டணியிலே சேர்ந்து செல்லக்கூடிய மேற்கு வங்காள மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். எல்லா

2020 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். இப்பொழுதும் சட்டப் போராட்டம் நடத்தி, இப்பொழுதும் அரசியல் அழுத்தம் கொடுத்து, கடைசி விளிம்புவரை போராடிக்கொண்டிருக்கக்கூடிய ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், ஜல்லிக்கட்டுக்கு விலக்கு பெற்றதுபோல இதற்கு விலக்கு பெறுவதற்கு வழிவகை இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒரு எள் அளவு, எள் முனை அளவு, ஊசி நுழையக்கூடிய முனை அளவு நமக்கு இடம் இருந்தால், அதிலே முதலில் நுழைந்து 'நீட்' பிரச்சினையிலே வெற்றியை நிலைநாட்டுவதற்குத் தயாராக இருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. அம்மா அந்தக் கொள்கையிலே உறுதியாக இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அந்தக் கொள்கையிலே இன்றைக்கும் உறுதியாக இருக்கிறார்கள்; அரசு உறுதியாக இருக்கிறது. அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. உணர்வோடு இருக்கிறோம், உணர்வோடு இருக்கிறோம். ஆனால், வரலாற்றுப் பிழை என்பதை நாம் மனதிலே வைக்காமல், மறுத்துவிட்டு, மறைத்துவிட்டு இப்பொழுது அரசியல் செய்வது மட்டும்தான் வேதனையாக இருக்கிறது என்பதை நான் மீண்டும் பதிவு செய்ய விரும்புகின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–30

(ஆ) பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் பேரவையில் அவருடைய படத்திற்கு மாலை அணிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** இது முடிந்துவிட்டதா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒவ்வொருவரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை இங்கே நினைவுபடுத்தி, அண்ணா அவர்களுடைய பெயரைச் சொல்லி பேசியபோது மனம் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், அண்ணா அவர்களின் படத்தைப் பார்த்த பிறகு கொஞ்சம் வருத்தமாக இருந்தது. நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுகொள்கிறேன். பல தலைவர்களுடைய படங்கள் இங்கே இருக்கின்றன. அவர்களுடைய பிறந்த நாளை அரசாங்கமே கொண்டாடுகின்றது. அன்றைக்காவது அந்தந்தப் படங்களுக்கு ஒரு மாலையை அணிவித்தால், அந்தத் தலைவர்களுக்கு மரியாதையாக இருக்கும், நமக்கும் மரியாதையாக இருக்கும். எனவே, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இன்றைக்கு மாலை அணிவித்திருக்க வேண்டும். அதில் தவறு இருந்தாலும்,